# தொழில் உரிமம் பெறாத கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் பறிமுதல்

## உழவர்கரை நகராட்சி எச்சரிக்கை

புதுச்சேரி, மே 26: உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுவை மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள், கழிவுநீர் வாகனங்களை இயக்க உழவர்கரை நகராட்சியிடம் தொழில் உரிமம் பெறுவது தொடர்பாக உழவர்கரை நகராட்சி மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை விதிகள் 2022 மற்றும் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் தடை சட்டம் 2013ன்படி தொழில் உரிமம் பெறுவது அவசியமாகும். இதுதொடர்பாக அறிவுறுத்தியும், இதுநாள் வரையில் ஒருசில வாகனங்களை தவிர மீதமுள்ள வாகன உரிமையாளர்கள் இதுவரை தொழில் உரிமம் பெறவில்லை. எனவே கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள் ஒருவார காலகெடுவுக்குள் உழவர்கரை நகராட்சி சுகாதார பிரிவினை அணுகி தொழில் உரிமம் பெற்று அதனை வாகனங்களில் ஒட்டி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தவறும்பட்சத்தில் நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளால் கழிவுநீர் வாகனங்கள் புதுவை போக்குவரத்து காவல் துறை உதவியுடன் பறிமுதல் செய்யப்படும்.

வீடுகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகளை கருவடிக்குப்பத்தில் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மட்டுமே வெளியேற்ற வேண்டும். இதனை தவிர்த்து கால்வாய்களிலும், காலி மனைகளிலும், நீர் நிலைகளிலும் வெளியேற்றுவது சட்டப்படி குற்றமாகும் மற்றும் தண்டனைக்குரியதாகும். மேலும் பயிற்சி பெற்ற ஊழியர்களை மட்டுமே உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

தவறினால் வாகனங்கள் பறிமுதல் செய்வதோடு உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். ஊழியர்களுக்கு பயிற்சி, உதவிக்கு உழவர்கரை நகராட்சியை அணுகவும். பொதுமக்கள் தங்கள் வீட்டு கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்ய நகராட்சியில் உரிமம் பெற்ற வாகனங்களை மட்டுமே ஈடுபடுத்த வேண்டும். உரிமம் பெற்ற வாகனங்களின் விபரங்கள் நகராட்சி இணையதளத்தில் வெளியிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

# கழிவுநீர் வாகனங்கள் தொழில் உரிமம் பெற கெடு

**புதுச்சேரி, மே 26–**

தொழில் உரிமம் பெறாத கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் எச்சரித்துள்ளார்.

அவரது செய்திக் குறிப்பு:

புதுச்சேரி மாவட்டத்தில் கழிவுநீர் வாகனங்களை இயக்க உழவர்கரை நகராட்சியிடம் தொழில் உரிமம் பெறுவது கட்டாயம் ஆகும். இது குறித்து பலமுறை அறிவுறுத்தியும், பல கழிவு நீர் வாகனங்களின் உரிமையாளர்கள் தொழில் உரிமம் பெறவில்லை.

கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள் ஒரு வாரத்திற்குள் உழவர்கரை நகராட்சி சுகாதார பிரிவை அணுகி, தொழில் உரிமம் பெற்று அதை வாகனங்களில் ஒட்ட வேண்டும். தவறினால் நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் மூலம் கழிவு நீர் வாகனங்கள் போலீஸ் உதவியோடு பறிமுதல் செய்யப்படும்.

வீடுகளில் இருந்து அகற்றும் கழிவுகளை கருவடிக்குப்பத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மட்டுமே வெளியேற்ற வேண்டும்.

இதை தவிர்த்து கால்வாய், காலிமனை, நீர்நிலைகளில் வெளியேற்றுவது சட்டப்படி குற்றம் மற்றும் தண்டனைக்கு உரியதாகும்.

பயிற்சி பெற்ற ஊழியர்களை மட்டுமே உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு பணியில் ஈடுபடுத்த வேண்டும். தவறினால் வாகனங்கள் பறிமுதல் செய்வதோடு, உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்படும்.

பொதுமக்கள் தங்கள் வீட்டு கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்ய நகராட்சியில் உரிமம் பெற்ற வாகனங்கள் மட்டுமே ஈடுபடுத்த வேண்டும்.

உரிமம் இல்லாத வாகனங்கள் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்வதை கண்டால் உடனே நகராட்சிக்கு வாட்ஸ் அப் எண் 7598171674 ல் புகார் தெரிவிக்கலாம்.

உரிமம் பெற்ற வாகன விபரங்கள் நகராட்சி இணையதள முகவரி http://oulmun.in/ல் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தொழில் உரிமம் பெறாத கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் பறிமுதல்

## உழவர்கரை நகராட்சி எச்சரிக்கை

புதுச்சேரி, மே.25-

தொழில் உரிமம் பெறாத கழிவுநீர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று உழவர்கரை நகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### தொழில் உரிமம்

புதுச்சேரி மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள், கழிவுநீர் வாகனங்களை இயக்க உழவர்கரை நகராட்சியிடம் தொழில் உரிமம் பெறுவது கட்டாயமாகும். உழவர்கரை நகராட்சி மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை விதிகள் 2022 மற்றும் மனித கழிவுகளை மனிதனே அகற்றும் தடை சட்டம் 2013-ன்படி தொழில் உரிமம் பெறுவது அவசியமாகும்.

இதுதொடர்பாக அறிவுறுத்தியும் இதுநாள் வரையில் ஒரு சில வாகனங்களை தவிர மீதமுள்ள வாகன உரிமையாளர்கள் இதுவரை தொழில் உரிமம் பெறவில்லை.

எனவே கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள் ஒரு வார காலக்கெடுவுக்குள் உழவர்கரை நகராட்சி சுகாதார பிரிவினை அணுகி தொழில் உரிமம் பெற்று அதனை வாகனங்களில் ஒட்டி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தவறும்பட்சத்தில் நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளால் கழிவுநீர் வாகனங்கள் புதுவை போக்குவரத்து காவல்துறை உதவியுடன் பறிமுதல் செய்யப்படும்.

### வாகனம் பறிமுதல்

வீடுகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகளை கருவடிக்குப்பத்தில் இயங்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மட்டுமே வெளியேற்ற வேண்டும். இதனை தவிர்த்து கால்வாய்களிலும், காலிமனைகளிலும், நீர் நிலைகளிலும் வெளியேற்றுவது சட்டப்படி குற்றமாகும் மற்றும் தண்டனைக்குரியதாகும்.

மேலும் பயிற்சி பெற்ற ஊழியர்களை மட்டுமே உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு பணியில் ஈடுபடுத்த வேண்டும். தவறினால் வாகனங்கள் பறிமுதல் செய்யவதோடு உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். ஊழியர்களுக்கு பயிற்சி, உதவிக்கு உழவர்கரை நகராட்சியை அணுகவும். பொதுமக்கள் தங்கள் வீட்டுகழிவு நீர் தொட்டிகளை சுத்தம் செய்ய நகராட்சியில் உரிமம்பெற்ற வாகனங்கள் மட்டுமே ஈடுபடுத்த வேண்டும். உரிமம்பெற்ற வாகனங்களின் விவரங்கள் நகராட்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.